**செய்தி வெளியீடு எண் : 1759** **நாள் : 08.10.2022**

**செய்தி வெளியீடு**

07.10.2022 அன்று தலைமைச் செயலகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் மற்றும் அவற்றின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், இத்துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிதியாண்டின் முதல் பாதி முடிவடைந்துள்ள நிலையில், இவ்வறிவிப்புகளை விரைவாக மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், இத்திட்டங்களின் பயன் அவர்களை விரைந்து சென்றிடுவதை உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் கையாளப்படும் பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்ப்புப் பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய காலத்திற்குள் இப்பணியினை முடித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு தென்காசி சு ஜவஹர், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் செயலாளர் திரு.சு.பழனிசாமி, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நல இயக்குநர் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப., பழங்குடியினர் நல இயக்குநர் திரு.எஸ்.அண்ணாதுரை, ம.தொ.ப., சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு உதவி காவல்துறைத் தலைவர் திருமதி பி.ஆர்.வெண்மதி, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in